நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**கோழிகளை மேல் மூச்சுக் குழாய் நோய் தாக்கும் அபாயம்**

First Published : 07 Jan 2012 12:28:39 PM IST

நாமக்கல், ஜன.6: கோழிகளை மேல் மூச்சுக் குழாய் நோய் தாக்கும் அபாயம் உள்ளதாக நாமக்கல் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக வானிலை ஆலோசனை மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து அம் மையம் வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிக்கை:

அடுத்த நான்கு நாள்களுக்கான நாமக்கல் மாவட்ட வானிலையில் வானம் லேசான மேகமூட்டத்துடன் மழையற்று காணப்படும்.

அதிகபட்ச வெப்பநிலை 32 டிகிரி செல்சியஸாகவும், குறைந்தபட்சம் 19 டிகிரி செல்சியஸாகவும் நிலவும். காற்றின் வேகம் மிதமாகவும், காற்றின் ஈரப்பதம் இயல்பாகவும் இருக்கும்.

வெப்ப அளவுகள் அதிக அளவு இயல்பைவிட விலகி செல்ல வாய்ப்பு இல்லாததால் கோழிகளில் தீவன எடுப்பு அதிக அளவிற்கு உயர வாய்ப்பில்லை. ஆயினும், பனி, குளிர் ஆகியவை மாறி மாறி நிகழும் வாய்ப்பு இன்னும் இருவாரங்களுக்கு தொடரும். எனவே, நச்சு தாக்கம் இல்லாத தீவனத்தை கோழிகளுக்கு பண்ணையாளர்கள் வழங்க வேண்டும்.

கடந்த வாரம் கோழியின நோய் கண்டறிதல் மற்றும் கண்காணிப்பு ஆய்வகத்தில் ஆய்வு செய்யப்பட்ட கோழிகள் பெரும்பாலும் மேல் மூச்சுக் குழல் நோய், ஈகோலை நோய் பாதிப்பால் இறந்திருப்பது தெரியவந்துள்ளது. ஆகவே, பண்ணையாளர்கள் கால்நடை மருத்துவரின் ஆலோசனைபடி, உரிய எதிர்உயிரி மருந்துகளை அளிப்பதுடன் பண்ணை உயிர் பாதுகாப்பு முறைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

விவசாயிகளுக்கான ஆலோசனை: குறுகிய கால துவரை பயிர் நன்கு முதிர்ந்து காய்ந்து அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது.

அறுவடை செய்த செடிகளை வயலிலேயே முதல் 5 நாள்கள் விட்டு வைத்தால், நன்கு காய்ந்து, சுலபமாக துவரையை எடுக்கலாம்.

**"பசுமைத் திட்ட வீடுகளுக்கு பயனாளிகளை தேர்வு செய்வதில் முறைகேடு'**

First Published : 07 Jan 2012 02:49:15 PM IST

களக்காடு, ஜன. 6: களக்காடு ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் பசுமைத் திட்ட வீடுகளுக்கு பயனாளிகளைத் தேர்வு செய்வதில் பல்வேறு முறைகேடுகள் நடைபெற்று வருவதாக வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊராட்சி ஒன்றியக்குழுக் கூட்டத்தில் உறுப்பினர் புகார் தெரிவித்தார்.

களக்காடு ஊராட்சி ஒன்றியக்குழுக் கூட்டம் அதன் தலைவர் மு.ச.ச. ஜார்ஜ் கோசல் தலைமையில் நடைபெற்றது. துணைத் தலைவர் ப. கிறிஸ்டி, வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) முத்துசுவாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

யாக்கோபு மாணிக்கவாசகம்: கிராம ஊராட்சிகளில் பசுமைத் திட்ட வீடுகளுக்கு பயனாளிகள் தேர்வு செய்யப்படுவதில் பல்வேறு முறைகேடுகள் நடைபெறுகிறது. பயனாளிகளைத் தேர்வு செய்யும்போது பொதுமக்களிடமிருந்து கையூட்டு பெறப்படுகிறது என்றார்.

த. சத்யாசங்கீதா : இடையன்குளம் குளம் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி வருகிறது. இக்குளத்தின் பழுதடைந்த மடைகளைச் சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அ. ஜான் மார்ட்டீன் : சட்டப்பேரவை உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர் நிதி எவ்வளவு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அந்த நிதியில் நடைபெறும் பணிகள் குறித்து உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

அ. கணேசன் : சிங்கிகுளம் - மேல்கரை இடையேயான சாலையில் புதிதாக தெருவிளக்குகள் அமைக்க வேண்டும்.

ப. கிறிஸ்டி : டோனாவூர் சுடுகாட்டுக்குச் செல்லும் சாலையைச் சீரமைக்க வேண்டும். தெருக்களில் சிமென்ட் சாலை அமைக்க வேண்டும்.

ந. காந்தியம்மாள் : வடக்கு புளியன்குளத்தில் மினி டேங்க் அமைத்து குடிநீர் தட்டுப்பாட்டை நீக்க வேண்டும். இக்கூட்டத்தில் உறுப்பினர்கள் மி. அருள்ராஜ், நா. அருணா ஜூலியட் உள்பட அனைத்து உறுப்பினர்களும் தங்களது வார்டுகளில் குடிநீர், தெருவிளக்கு, சாலை உள்ளிட்ட அடிப்படை வசதிகளை நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்திப் பேசினர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**தேங்காய்எண்ணெய் விலை வீழ்ச்சி-பிசினஸ் ஸ்டாண்டர்ட் உடன் இணைந்து-**

ஜனவரி 07,2012,00:37



தேங்காய் உற்பத்தி உயர்ந்துள்ளதால், தேங்காய்எண்ணெய் விலை, முன் எப்போதும் இல்லாத அளவிற்கு, வீழ்ச்சி கண்டுள்ளது. கொச்சி மொத்த விற்பனை சந்தையில், ஒரு குவிண்டால், 10 ஆயிரத்து, 400 ரூபாய்க்கு விற்பனையான தேங்காய்எண்ணெய், தற்போது, 7,650 ரூபாயாக குறைந்துள்ளது.பொதுவாக, ஜனவரி முதல் மார்ச் வரையிலான காலத்தில், தேங்காய் அதிக அளவில் உற்பத்தியாகும். கேரளா, தேங்காய் உற்பத்தியில் முதலிடத்தில் உள்ளது. இங்கு, 7 லட்சத்து, 90 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் தென்னை மரம் பயிரிடப்பட்டுள்ளது.


இதன் மூலம், ஆண்டுக்கு சராசரியாக, 600 கோடி தேங்காய்கள் உற்பத்தியாகின்றன. இளநீர், தேங்காய் எண்ணெய் ஆகியவற்றுக்கான தேவை அதிகரித்துள்ளதால், விவசாயிகள், தேங்காய்உற்பத்தியில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். இதனால், நடப்பாண்டில் தேங்காய் உற்பத்தி, 10 சதவீதம் அதிகரிக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.நடப்பாண்டில், தமிழகத்தில், தென்னை சாகுபடி பரப்பளவு, 3 லட்சத்து, 67 ஆயிரம் ஹெக்டேரிலிருந்து, 3 லட்சத்து, 90 ஆயிரம் ஹெக்டேராக அதிகரித்துள்ளது. இதையடுத்து, 600 கோடி தேங்காய் உற்பத்தியாகும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், கடந்த மூன்று, நான்கு ஆண்டுகளாக, ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களிலும் தேங்காய்விளைச்சல் உயர்ந்துள்ளது.தமிழகத்தில், ஒரு ஹெக்டேருக்கு, 13 ஆயிரத்து, 771

தேங்காய்கள் உற்பத்தியாகின்றன. இது, ஆந்திராவில், 9 ஆயிரத்து, 327 ஆகவும் உள்ளது. கேரளாவில் அதிக பரப்பளவில் தென்னை மரங்கள் உள்ளபோதிலும், ஒரு ஹெக்டேரில் விளையும் தேங்காய்களைப் பொருத்தவரை, தமிழகம் முதலிடத்தில் உள்ளது.கேரளாவில், 7 லட்சத்து, 90 ஆயிரம் ஹெக்டேரில் தென்னை மரங்கள் உள்ளன. இங்கு, ஒரு ஹெக்டேரில் 7 ஆயிரத்து, 365 தேங்காய்மட்டுமே விளைகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

**"தானே' புயலால் தென்னங்கீற்று வியாபாரிகளுக்கு யோகம்**

ஜனவரி 07,2012,00:36



கிருஷ்ணகிரி:சென்னை உள்ளிட்ட கடலோர மாவட்டங்களில், தொடர்ந்து பெய்த கனமழை மற்றும் தானே புயலால், கடலோரப் பகுதியில் கட்டப்பட்டிருந்த குடிசை வீடுகள் சேதமடைந்தன. இதன் காரணமாக, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இருந்து கடலோர மாவட்டங்களுக்கு தென்னங்கீற்று அனுப்புவது அதிகரித்துள்ளது.சென்னை, புதுச்சேரி உள்ளிட்ட பெரு நகரங்களின் கடலோரப் பகுதியில், அதிக அளவில் குடிசை வீடுகள் உள்ளன. பெரும்பாலும், கடலுக்குள் மீன் பிடிக்கச் செல்பவர்கள் மற்றும் மீன் பிடித் தொழிலை நம்பியுள்ளவர்கள் அனைவரும், கடலோரப் பகுதியில் தென்னங்கீற்றால் வேயப்பட்ட குடிசை வீடுகளில் வாழ்ந்து வருகின்றனர்.

கடந்த சில வாரங்களாக, தமிழகத்தில் தொடர் மழை பெய்து வந்தது. குறிப்பாக, தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில், அதிக அளவு மழை பெய்தது. மேலும், தானே புயல் வீசியதால், கடலோரப் பகுதியில் கட்டப்பட்டிருந்த குடிசை வீடுகள் சேதமடைந்தன.
பெரும்பாலும், தமிழகத்தின் கடலோரப் பகுதியில் வீடுகள் கட்ட, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இருந்து, அதிக அளவில் தென்னங்கீற்றுகள் அனுப்பப்படும். கிருஷ்ணகிரி மாவட்டத்தில், பொள்ளாச்சி மற்றும் ஈரோடு மாவட்டத்துக்கு அடுத்தபடியாக, அதிக அளவு, அதாவது, 14 ஆயிரம் ஹெக்டேருக்கு மேல் தென்னை சாகுபடி செய்யப்படுகிறது.

இதனால், தென்னை மரத்தில் இருந்து விழும் ஓலையை கொண்டு, தென்னங்கீற்று முடையும் தொழில், கிருஷ்ணகிரி மாவட்டத்தில், குடிசைத் தொழிலாளாகச் செய்யப்பட்டு வருகிறது.

பொதுவாக, கிருஷ்ணகிரி மாவட்டத்தில், தென்பெண்ணை ஆற்றுப் பாசன பகுதியில் இருந்து, அதிக அளவு தென்னங்கீற்றுகள், கடலோர மாவட்ட கிராமங்களுக்கு அனுப்பப்படுகின்றன.இதற்காக, கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டணம், மலையாண்டஅள்ளி, அகரம், வேலம்பட்டி, அரசம்பட்டி, பாரூர் ஆகிய பகுதிகளில் இருந்து, நாள்தோறும் குறைந்தது, 200க்கும் மேற்பட்ட லாரிகளில், தென்னங்கீற்றுகள் அனுப்பப்படுகின்றன.நான்கு அடி நீளமுள்ள, 22 கீற்றுகள் கொண்ட ஒரு கீற்றுக் கட்டு, கடந்த இரு மாதங்களுக்கு முன், 20 ரூபாய்க்கு வாங்கப்பட்டு, வியாபாரிகள் வேறு மாவட்டத்துக்கு அனுப்பி வந்தனர்.

இந்நிலையில், தொடர் மழை காரணமாக, தென்னங்கீற்றுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ள நிலையில், ஒரு கட்டு தென்னங்கீற்றின் விலை உயர்ந்துள்ளது.தற்போது, 22 கீற்றுகள் கொண்ட ஒரு கட்டுக் கீற்றின் விலை, 25 ரூபாயில் இருந்து, 30 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. இதனால், கீற்று முடைதல் தொழிலை குடிசைத் தொழிலாக செய்து வருபவர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**உலக காபி ஏற்றுமதி குறைந்தது**

ஜனவரி 07,2012,00:28



புதுடில்லி:சென்ற ஆண்டின் அக்டோபர் - நவம்பர் காலத்தில், சர்வதேச காபி ஏற்றுமதி, 3 சதவீதம் குறைந்து, 1.5 கோடி மூட்டைகளாக (ஒரு மூட்டை - 60 கிலோ) குறைந்துள்ளது. இது, இதற்கும் முந்தைய ஆண்டின் இதே காலத்தில், 1.55 கோடி மூட்டைகளாக அதிகரித்திருந்தது என, சர்வதேச

காபி கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.சென்ற நவம்பரில், சர்வதேச காபி ஏற்றுமதி, 77 லட்சம் மூட்டையிலிருந்து, 78 லட்சம் மூட்டைகளாக அதிகரித்துள்ளது. அதேசமயம், அக்டோபர் மாதத்தில், இதன் ஏற்றுமதி, 9 சதவீதம் குறைந்து, 78 லட்சத்திலிருந்து, 71 லட்சம் மூட்டைகளாக வீழ்ச்சி கண்டது.நடப்பு காபி பருவத்தில், சர்வதேச அளவில், 12.86 கோடி மூட்டை உற்பத்தி செய்யப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

---

தினத்தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

# கண்ணை கவரும் மலர் கண்காட்சி



கோவை வேளாண்மை பல்கலைக்கழகத்தில் 1½ லட்சம் பூக்களுடன் வண்ணமயமான மலர் கண்காட்சி நேற்று தொடங்கியது. மலர் கண்காட்சியில் இடம்பெற்றிருந்த, 25 ஆண்டுக்கும் மேலான 'போன்சாய்' குட்டை மரங்களின் கண்கவர் அணிவகுப்பை மாணவிகள் ஆர்வத்துடன் பார்வையிட்ட காட்சி.

## *2011 நவம்பர் மாதத்தில் தேயிலை ஏற்றுமதி 13 சதவீதம் உயர்ந்தது*

*கடந்த 2011 நவம்பர் மாதத்தில், தேயிலை ஏற்றுமதி 13.4 சதவீதம் அதிகரித்து 1.75 கோடி கிலோவாக அதிகரித்துள்ளது. தேயிலை உற்பத்தி 3.8 சதவீதம் குறைந்து 9.03 கோடி கிலோவாக சரிவடைந்துள்ளது என தேயிலை வாரியம் தெரிவித்துள்ளது.*

*தேயிலை உற்பத்தியில் சீனாவுக்கு அடுத்தபடியாக இரண்டாம் இடத்தில் உள்ள இந்தியா சி டி சி ரக தேயிலையை எகிப்து, பாகிஸ்தான் மற்றும் இங்கிலாந்து போன்ற நாடுகளுக்கு அதிக அளவில் ஏற்றுமதி செய்து வருகிறது. இது தவிர ஈரான், ஈராக் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு உயர் ரக தேயிலையான ஆர்த்தடாக்ஸ் ரக தேயிலையும் ஏற்றுமதி செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.*

*சர்வதேச அளவில் இந்தியா தேயிலை உற்பத்தியில் 31 சதவீத பங்கினையும் ஏற்றுமதியில் 14 சதவீத பங்கினையும் கொண்டுள்ளது.*

*நாட்டிலுள்ள 1,600 தேயிலை தோட்டங்களில் சுமார் 20 லட்சத்திற்கும் அதிகமானோர் பணிபுரிந்து வருகின்றனர்.*

## *வரும் 2012–13–ஆம் நிதி ஆண்டில் முக்கிய கடன்களுக்கான வட்டி 1.25 சதவீதம் குறைய வாய்ப்பு*

*வரும் 2012–13–ஆம் நிதி ஆண்டில் 'ரெப்போ' ரேட்ஸ் எனப்படும் முக்கிய கடன்களுக்கான வட்டி விகிதம் 1.25 சதவீதம் குறைய வாய்ப்புள்ளது என கிரெடிட் சூயிஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.*

*வங்கிகள் பாரத ரிசர்வ் வங்கியிடமிருந்து குறுகிய கால அடிப்படையில் பெறும் கடனிற்கான வட்டி விகிதத்திற்கு 'ரெப்போ ரேட்' என்று பெயர். இந்த 'ரெப்போ ரேட்' ஏப்ரல் மாதத்திற்குள் முதல் கட்டமாக 0.25 சதவீதமும், வரும் ஆண்டில் ஒட்டுமொத்தத்தில் 1.25 சதவீதமும் குறைய வாய்ப்புள்ளது என்று கிரெடிட் சூயிஸ் வங்கியின் இயக்குனர் ராபர்ட் பிரையர் வாண்டஸ்ஃபோர்டு தெரிவித்துள்ளார்.*

*பணவீக்கம்*

*உணவு பணவீக்கம், டிசம்பர் 24–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் கடந்த பல ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 3.36 சதவீதம் சரிவடைந்துள்ளது. இதனையடுத்து, பொது பணவீக்கம் நடப்பு நிதி ஆண்டில் 7 சதவீதத்திற்கும் கீழாக குறைய வாய்ப்புள்ளது என கிரெடிட் சூயிஸ் தெரிவித்துள்ளது.*

*பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில், பாரத ரிசர்வ் வங்கி பல முறை முக்கிய கடன்களுக்கான வட்டி விகிதங்களை உயர்த்தியதையடுத்து, நடப்பு நிதி ஆண்டின் இரண்டாவது காலாண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி கடந்த ஆறு காலாண்டுகளில் இல்லாத அளவிற்கு 6.9 சதவீதமாக குறைந்தது.*

*இந்நிலையில், பணவீக்கம் குறைந்து வருவதால், நாட்டின் பொருளாதார வளர்ச்சியை*

மேம்படுத்தும் வகையில் ரிசர்வ் வங்கி முக்கிய கடன்களுக்கான வட்டியை குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பொருளாதார வளர்ச்சி

இருப்பினும், சர்வதேச அளவில் நிலவி வரும் பொருளாதார மந்தநிலையால், வரும் நிதி ஆண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 6–7 சதவீதமாகத்தான் இருக்கும் என கிரெடிட் சூயிஸ் முன்னறிவிப்பு செய்துள்ளது.

அமெரிக்க டாலருக்கு எதிராக இந்திய ரூபாயின் வெளிமதிப்பு சரிவு உடனடியாக குறைய வாய்ப்பில்லை என்று தெரிவித்துள்ளது. கடந்த 2011–ஆம் ஆண்டில், நாட்டின் பங்கு வர்த்தகம் மந்தமாக இருந்தது. 'சென்செக்ஸ்' 5,054 புள்ளிகளை இழந்தது. இந்நிலையில், நடப்பு 2012–ஆம் ஆண்டில், நாட்டின் பங்கு வர்த்தகம் நன்றாக இருக்கும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.